இருக்கின்ற மூத்த உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சார்ந்தவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, யாரும் புலியைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 புலிகளில் ஒரு புலியையாவது பார்க்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க முயற்சி எடுப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் வந்து அதைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 334, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

334—

கால்நடை மருத்துவமனை

***10433—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

2002 மே 9]

திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் உள்ள முல்லையூர் கிராமத்தைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு இருக்கின்ற கால்நடைகளான கறவை பசு மாடுகள், உழவு மாடுகள், கோழிகள் போன்றவற்றுக்கெல்லாம் உடல்நிலை சரியில்லை என்றால், அவற்றை அழைத்துச் செல்ல வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தாண்டிச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதியில் ஒரு பகுதி நேர கால்நடை மருத்துவமனையாவது அமைக்க இந்த அரசு முன்வருமா? இந்த ஆண்டில் இல்லை என்றாலும், வருகின்ற ஆண்டிலாவது அரசு செய்யுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, முல்லையூர் கிராமம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகின்றது. முல்லையூர் கிராமத்திலிருந்து 7 கிலோமீட்டர் தூரத்தில் ஆர். எஸ். மாத்தூரில் ஒரு கால்நடை மருந்தகமும், 8 கிலோமீட்டர் தூரத்தில் குமுனூர் என்ற இடத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் உள்ளன. முல்லையூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 8,972 கால்நடைகள் உள்ளன. தற்போது இத்துறையில் மறு சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்துவரும் கால்நடை மருத்துவர்களைத் துறைக்கு திரும்ப எடுக்கும்போது, மேற்படி முல்லையூர் கிராமத்தில் புதிதாக கால்நடை மருந்தகம் திறக்க அரசின் நிதிநிலைக்கு உட்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]